# IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF SULUR

## (DEPOSITION OF WITNESS

**வா.சா.1-)**

**அசல் வழக்கு எண். 3/2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. ராஜேஸ்வரி | தாலூக்கா | கோயம்புத்தூர் |
| கணவர் பெயர் | சுப்பிரமணியம் | கிராமம் | சித்ரா |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 05.02.2026 is accordance with the provision of Act X of 3331

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை எழுத்துபூர்வமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் உண்மைதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பில் ஏற்றுகொள்ள வேண்டுகிறேன்.

| ஆவண எண். | தேதி | ஆவணம் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 01.11.1993 | பொது அதிகார பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 14.05.1997 | கிரய ஆவணம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 31.05.2019 | வில்லங்க சான்றிதழ் | பதிவிறக்க நகல் |
| வா.சா.ஆ.4 | 19.01.2018 | மோப்பிரிபாளையம் கிராம புல எண்.181/1D க்கான கூட்டு பட்டா எண்.2148 | பதிவிறக்க நகல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.5 | 15.10.2007 | வாதி பெயரில் உள்ள கிரய பத்திரம் ஆவண எண்.5690/2007 | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.6 | 01.11.2010 | ராக்கிமுத்து பெயரில் உள்ள கிரய பத்திரம் ஆவண எண்.8075/2010 | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.7 | 24.11.2010 | ராபர்ட் பெயரில் உள்ள கிரய பத்திரம் ஆவண எண்.9045/2010 | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.8 | 03.05.2018 | வாதி மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களுக்கு கொடுத்த புகார் | கையிருப்பு நகல் |
| வா.சா.ஆ.9 | 12.12.2019 | வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.10 | - | 1 முதல் 3 பிரதிவாதிகளின் அஞ்சலக ஒப்புதல் அட்டை(3 எண்ணிக்கைகள்) | அசல் |
| வா.சா.ஆ.11 | - | ரங்கசாமியின் திருப்பப்பட்ட அஞ்சலக உறை | அசல் |
| வா.சா.ஆ.12 | 06.04.2019 | வாதி, 4, 5 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.13 | - | 4, 5 பிரதிவாதிகளின் அஞ்சலக ஒப்புதல் அட்டை | அசல் |

தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. நான் தாக்கல் செய்துள்ள சான்றிட்ட ஆவணங்களின் அசல் என்னிடம் உள்ளதா என்றால் அசல் பத்திரம் தொலைந்துவிட்டது. அசல் ஆவணங்கள் காணாமல் போனது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். Non Traceable Certificate பெற்றேனா என்றால் ஆமாம். நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரையும், Non Traceable Certificate யையும், இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய

முடியும் என்றால் சரிதான். நான், எப்போது தாக்கல் செய்கிறேன் என்றால் வரும் வாய்தாவில் தாக்கல் செய்கிறேன். 1997 ம் ஆண்டு தான் சொத்தை கிரயம் பெற்றேன் என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி ஜெனிபர் 2010 ம் ஆண்டு சொத்தை கிரயம் பெற்றார். ஜெனிபர் வாங்கி 13 ஆண்டுகள் கழித்து நான் கிரயம் பெற்றேன்.

2. 1 ம் பிரதிவாதி தாவா சொத்தில் எப்போது வீடு கட்டினார் என்பது தெரியுமா என்றால் தெரியும், 2010 ம் நான் சொத்து சென்ற போது அதில் வீடு கட்டியிருந்தது. 2018 ல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும், 2019 ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். 2019 ம் ஆண்டில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி 2010 ல் வீடு கட்டி 2013 ம் ஆண்டு வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் வீடு கட்டியது எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் எனக்கு தனிப்பட்ட முறையில் பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கூட்டு பட்டா தாக்கல் செய்துள்ளேன். வில்லங்க சான்றிதழில் என்னுடைய சொத்தின் பிளாட் எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் என் கணவருக்கு தான் தெரியும்.

**<u>1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

குறுக்குவிசாரணை வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham

District Munsif, Sulur